OS.No.420/2023 – Date : 11.09.2025

PW1 – முருகேசன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

ஏ.பி. பழனி என்பவர் சங்க உறுப்பினரா என்றால் அவர் சங்கத்தில் இல்லை. அவர் சங்கத்தின் பெயரை முறையாக பதிவு செய்யவில்லை என்று சேலம் மாவட்ட பதிவாளர் முன்பு மனு தாக்கல் செய்தார் என்றால் சரி. தற்போது சாட்சி பழனி என்பவர் வரதராஜனுக்கு சங்கத்தை பதிவு செய்து கொடுக்காதீர்கள், அவர் தவறானவர் என்று சொன்னார் என்று சாட்சியம் அளிக்கிறார்.

13.02.2023ல் சேலம் மாவட்ட பதிவாளர் பிறப்பித்த செயல்முறை ஆணையில் ஏ.பி. பழனி என்பவர் தரப்பினராக இருந்தார் என்றும், அவரை தாவாவில் தரப்பினராக சேர்க்காமல் தாவாவில் பரிகாரம் கோர முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. அவசர கால நடவடிக்கையாக என்னை தலைவராக நியமித்ததற்கு தீர்மானம் எதுவும் போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பட்டுள்ளது. அந்த தீர்மானத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தீர்மானம் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை முறையாக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதை

நிரூபிக்காமல் சங்கத்தின் பிரதிநிதியாக நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.